

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

விழி-18 சாட்சி -203 18.11.2026 FREE EPAPER

வங்கக்கடலில் 'அக்வான்' புயல் தீவிரம்! சென்னைக்கு மிக கனமழை அபாயம்!

சென்னை, நவ. 17:

வங்கக்கடலில் உருவாகியுள்ள 'அக்வான்' புயல் தீவிரமடைந்து ஆந்திரக் கடற்கரையை நோக்கி நகரும் நிலையில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளதாக வானிலை முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன. இன்று மற்றும் நாளை இந்த மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும். புயல் நவம்பர் 20-ஆம் தேதி ஆந்திராவின் நெல்லூர்துனி இடையே கரையைக் கடக்க வாய்ப்புள்ளது. இதனால் வட தமிழகக் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று, கடல் சீற்றம் மற்றும் கனமழை அபாயம் அதிகரித்துள்ளது.

ஆந்திரக் கடற்கரையை நோக்கி அக்வான் புயல்!

வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் படிப்படியாக வலுப்பெற்று 'அக்வான்' புயலாக மாறியுள்ளது. கடற்பரப்பில் நிலவும் வானிலைச் சூழல் காரணமாகப் புயல் மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளது. இந்தப் புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திரக் கடற்கரையை நெருங்கக்கூடும். நவம்பர் 20-ஆம் தேதி நெல்லூர்துனி இடையே கரையைக்கடக்கும்வாய்ப்பை வானிலை முன்னறிவிப்புகள் சுட்டிக்காட்டுகின்றனபுயலின் நகரும் வேகம் மற்றும் திசையில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து மழையின் தீவிரமும் பாதிப்புகளும் மாறக்கூடும்.

மூன்று மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் நவம்பர் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்புகள் எச்சரிக்கின்றன. குறுகிய நேரத்தில் அதிக மழை பெய்தால் தாழ்வான குடியிருப்புப் பகுதிகள், சுரங்கப்பாதைகள் மற்றும் முக்கியச் சாலைகளில் மழைநீர் தேங்கும் அபாயம் உள்ளது. கடலோரப் பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் வசிக்கும் மக்கள் வானிலை நிலவரத்தைக் கவனித்து முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

காஞ்சிபுரம், ராணிப்பேட்டையிலும் கனமழை!

சென்னையை ஒட்டிய காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களிலும் கனமழை பெய்யக்கூடும்.புயலின் தாக்கத்தால் கடலோரப் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் அபாயம் உள்ளது.காற்றின் வேகம் அதிகரிக்கும் நேரங்களில் மரங்கள், மின்கம்பங்கள் மற்றும் பாதுகாப்பற்ற கட்டடங்களின் அருகே பொதுமக்கள் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

மீனவர்களுக்கு கடும் எச்சரிக்கை!

புயல் காரணமாக வங்கக்கடலில் கடல் சீற்றம் அதிகரிக்கக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளனர். ஆழ்கடலில் மீன்பிடிக்கும் படகுகள் பாதுகாப்பான துறைமுகங்களை நாட வேண்டும். சிறிய படகுகளில் கடலுக்குச் செல்வோர் வானிலை எச்சரிக்கைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். கடலோரக் கிராமங்களில் வசிக்கும் மீனவக் குடும்பங்களும் கடல் சீற்றம் அதிகரிக்கும் நேரங்களில் கடற்கரைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.



சென்னையாங்கூன் விமானம் ரத்து!

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சென்னையிலிருந்துமியான்மர் நாட்டின் யாங்கூன் நகருக்குச் செல்லும் வாராந்திர விமானச் சேவையை இரு மார்க்கங்களிலும் ரத்து செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. வானிலை மாற்றங்களால் விமானப் போக்குவரத்தில் மேலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பயணிகள் தங்களது விமான நிறுவனங்களின் அறிவிப்புகளைச் சரிபார்க்க வேண்டும்.

பொதுமக்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை!

கனமழைச்சரிக்கையைத் தொடர்ந்து தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவசரத் தேவைகளுக்கான பொருட்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். மின்கம்பிகள் அறுந்து இடக்கிடையும் மழைநீர் தேங்கிய பகுதிகளையும் தவிர்க்க வேண்டும். மழை அதிகரிக்கும் நேரங்களில் தேவையற்ற பயணங்களைக் குறைக்க வேண்டும். முதியவர்கள், குழந்தைகள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களின் பாதுகாப்புக்கு குடும்பத்தினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த 48 மணி நேரம் முக்கியம்!

புயல் ஆந்திரக் கடற்கரையை நெருங்கும் நிலையில் வட தமிழகத்தில் மழையும் காற்றும் தீவிரமடைய வாய்ப்புள்ளது. புயலின் நகர்வு, கரையைக் கடக்கும் நேரம் மற்றும் மழையின் அளவு ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியமாகிறது. சென்னை உள்ளிட்ட வட தமிழக மாவட்டங்களுக்கு விடுத்துள்ள மிக கனமழை எச்சரிக்கை காரணமாக அடுத்த 48 மணி நேரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பொதுமக்கள், மீனவர்கள் மற்றும் பயணிகள் அதிகாரப்பூர்வ வானிலை அறிவிப்புகளைப் பின்பற்றி பாதுகாப்புடன் செயல்பட வேண்டும்.

இன்றைய நாள்

புதன்கிழமை
(18-11-2026)
பராப ஆண்டு,
கார்த்திகை 02
திதி
இன்று அதிகாலை 02:33 வரை அஷ்டமி பின்பு நவமி
நட்சத்திரம்:
இன்று அதிகாலை 01:59 வரை அவிட்டம் பின்பு சதயம்
ராகுகாலம்
12:00 PM – 01:30 PM
எமகண்டம்
07:30 AM – 09:00 AM
சூலம் -- வடக்கு
நல்ல நேரம் :
காலை :11:15 - 12:00
மாலை : 04:45 - 05:45

மேஷம் ---------- வெற்றி
ரிஷபம் ---------- நட்பு
மிதுனம் -------- முன்னேற்றம்
கடகம் ---------- நன்மை
சிம்மம் ---------- கவனம்
கன்னி ---------- வெற்றி
துலாம் ---------- ஆதாயம்
விருச்சிகம் --------- அமைதி
தனுசு ---------- உயர்வு
மகரம் ---------- செலவு
கும்பம் ---------- பிரீதி
மீனம் ----------நற்செய்தி

5 கோப்பைகள், 5,439 ரன்கள்... 'சேப்பாக்கின் ராஜா' தோனி சிஎஸ்கே அணிக்காக படைத்த சாதனைகள்!

நவம்பர் 17

ஹைதராபாத்: கடந்த 2008ஆம் ஆண்டு முதல் மஞ்சள் ஜெர்சியில் 5 ஐபிஎல் கோப்பைகள், 2 சாம்பியன்ஸ் லீக் கோப்பைகளை வென்று சாதனை படைத்துள்ள தோனி, இனி சிஎஸ்கே அணியின் ஆலோசகராகத் தனது அடுத்த அத்தியாயத்தைத் தொடங்கவுள்ளார்.

"சிஎஸ்கே என்றால் தோனி, தோனி என்றால் சிஎஸ்கே" என்ற அளவிற்குக் கடந்த 19 ஆண்டுகளாகச் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உயிர்நாடியாகத் திகழ்ந்த மகேந்திர சிங் தோனி, ஐபிஎல் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று ரசிகர்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். கடந்த 2008-ஆம் ஆண்டு முதல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய மகேந்திர சிங் தோனி, வீரராகவும், கேப்டனாகவும் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளார்.



அந்த வகையில், 2008-ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரின் முதல் ஏலத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியால் வாங்கப்பட்ட தோனி, அந்த அணியை ஐபிஎல் வரலாற்றின் மிகச்சிறந்த அணியாக மாற்றினார். அவரது கேப்டன்சியின் கீழ் சிஎஸ்கே அணி 2010, 2011, 2018, 2021 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் 5 முறை ஐபிஎல் சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தது. ஐபிஎல் வரலாற்றில் அதிக கோப்பைகளை வென்ற கேப்டன் என்ற பெருமையை ரோஹித் சர்மாவுடன் அவர் பகிர்ந்துள்ளார்.

ஐபிஎல் மட்டுமின்றி, சர்வதேச கிளப் அணிகள் மோதிய சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரிலும் 2010 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் சிஎஸ்கே அணியை சாம்பியனாக்கிக் காட்டினார் மகேந்திர சிங் தோனி. தோனி வழிநடத்திய காலத்தில் சிஎஸ்கே அணி 12 முறை பிளே-ஆஃப் சுற்றுக்கும், 10 முறை இறுதிப் போட்டிக்கும் முன்னேறி ரசிகர்களை உச்சாகத்தில் ஆழ்த்தியது. சிஎஸ்கே அணிக்காக 244 போட்டிகளில் கேப்டனாகச் செயல்பட்டுள்ள தோனி, அதில் 145 வெற்றிகளைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு கேப்டனாக மட்டுமல்லாமல், உலகின் தலைசிறந்த 'ஃபினிஷராகவும்' தோனி சிஎஸ்கே அணிக்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்துள்ளார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 278 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 5,439 ரன்களைக் குவித்துள்ளார். இதன் மூலம் சிஎஸ்கே அணிக்காக அதிகப் போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற சாதனையையும், சுரேஷ் ரெய்னாவுக்குப் பிறகு அதிக ரன்கள் குவித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

குறிப்பாக, ஐபிஎல் வரலாற்றில் 20ஆவது ஓவரில் அதிக ரன்கள் (800-க்கும் மேல்) மற்றும் அதிக சிக்ஸர்கள் (72 சிக்ஸர்கள்) அடித்த வீரர் என்ற தனித்துவச் சாதனை தோனியிடமே உள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு தர்மசாலாவில் பஞ்சாப் அணிக்கு எதிராக அவர் அடித்த 54 ரன்களும், கடந்த 2018ஆம் ஆண்டு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிராகச் சின்னசாமி மைதானத்தில் விளாசிய 79 ரன்களும் ரசிகர்களால் இன்றளவும் கொண்டாடப்படுகின்றன.

விக்கெட்டுக்குப் பின்னால் தோனி நின்றாலே பேட்ஸ்மேன்களுக்கு அச்சம் ஏற்படும் அளவிற்கு அவரது விக்கெட் கீப்பிங் நிறைந்தது. கண் இமைக்கும் நேரத்தில் ஸ்டம்பிங் செய்து ஆட்டத்தின் போக்கையே மாற்றுவதில் தோனிக்கு நிகர் அவரே. ஐபிஎல் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையையும் அவர் தன்வசம் வைத்துள்ளார். அதனபடி 278 போட்டிகளில் 158 கேட்ச்கள் மற்றும் 47 ஸ்டம்பிங்ஸ் என மொத்தமாக 205 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார்.

இரண்டு ஆண்டுகள் தடைக்குப் பிறகு 2018ஆம் ஆண்டு சிஎஸ்கே அணி மீண்டும் களமிறங்கியபோது, "டாடில் ஆர்மி" (Dad's Army) என்ற விமர்சனங்களைத் தவிடுபொடியாக்கி கோப்பையை வென்று காட்டினார் தோனி. அதேபோல், 2023ஆம் ஆண்டு முழங்கால் வலியோடு விளையாடி 5ஆவது கோப்பையை வென்று கொடுத்து, வெற்றிக்குப் பிறகு ஜடேஜாவை தூக்கிக் கொண்டாடிய தருணம் ரசிகர்களை இன்றளவும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

இவ்வாறு பல்வேறு நினைவுகளை சிஎஸ்கே அணிக்கும், அதன் ரசிகர்களுக்கும் கொடுத்துள்ள மகேந்திர சிங் தோனி ஐபிஎல் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்திருப்பது சோகத்தை அளித்தாலும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டுள்ளது ரசிகர்களுக்கு ஆறுதல் அளித்துள்ளது. இதனால் களத்தில் தோனியின் ஆட்டத்தைக் காண முடியாவிட்டாலும், டக்-அவுட்டில் அவர் தன் வியூகங்களால் சிஎஸ்கேவைத் தொடர்ந்து வழிநடத்தவுள்ளது ரசிகர்களை ஆறுதல்படுத்தியுள்ளது.

TOP 10 இன்றைய முக்கிய செய்திகள்

1. அக்வான் புயல் தீவிரம் – 5 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!
வங்கக்கடலில் உருவாகியுள்ள 'அக்வான்' (Akvan) புயல் தீவிரப் புயலாக வலுப்பெற்றுள்ளது. இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய் வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2. 150 ஆண்டுகால மரபே தொடர வேண்டும்!
திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பாக 150 ஆண்டுகால பாரம்பரிய முறைப்படியே தொடர அனுமதிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இடைக்கால உத்தரவு கோரியுள்ளது.

3. 108 ஆம்புலன்ஸ் சேவை – முதல்வர் விஜய் நேரில் ஆய்வு!
சென்னையில் உள்ள 108 ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையத்தில் முதலமைச்சர் விஜய் நேரில் ஆய்வு மேற்கொண்டு, அவசரகால மருத்துவ சேவைகளின் செயல்பாடுகள், அழைப்பு பெறும் நடைமுறை மற்றும் விரைவு சிகிச்சை ஒருங்கிணைப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

4. மேகதாதுவில் ஒரு செங்கல் வைக்க விடமாட்டோம்!
மேகதாது அணை கட்டுவதை பாராமும் தடுக்க முயலாது என கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறிய நிலையில், மேகதாதுவில் ஒரு செங்கலைக் கூட வைக்க விடமாட்டோம் என தமிழக அமைச்சர் நிர்மல்குமார் கடும் பதிலடி கொடுத்துள்ளார்.

5. இன்று 9 மணி முதல் 4 மணி வரை மின்தடை!
தூணை மின் நிலையங்களில் நடைபெறும் மாதாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று (நவம்பர் 18) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு முக்கியப் பகுதிகளில் மின்தடை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

6. துரைமுருகன் மீது ரூ.1,427 கோடி வழக்கு தீவிரம்!
முன்னாள் அமைச்சர் துரைமுருகன் மீது ரூ.1,427 கோடி மதிப்பிலான சட்டவிரோத மணல் கொள்ளை தொடர்பாக வஞ்சு ஒழிப்புத்துறை (DVAC) பதிவு செய்துள்ள வழக்கு விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளது.

7. அருள் விக்னேஷ் விவகாரம் – பாஜக இன்று போராட்டம்!
தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் தொடர்பான சர்ச்சையைக் கண்டித்து இன்று (நவம்பர் 18) போராட்டம் நடத்தவுள்ளதாக பாஜக அறிவித்துள்ளது. எம்எல்ஏ மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பாஜக மாவட்ட அளவில் போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறது.

8. விதிமீறும் பணியாளர்களுக்கு இனி இடமில்லை!
பள்ளிக்கல்வித் துறையில் விதிகளை மீறிச் செயல்படும் பணியாளர்கள் இனி பணியில் தொடர முடியாது எனத் துறை சார்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒழுங்கை மீறல், அலட்சியம் மற்றும் ஒழுங்கீன முச் செயல்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

9. தனிஷ்க் கொள்ளை – 11 கிலோ தங்கம், வைர நகைகள் மாயம்!
மதுரையில் உள்ள தனிஷ்க் நகைக்கடையில் 11 கிலோ தங்கம் மற்றும் வைர நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில், குற்றவாளிகளைப் பிடிக்க காவல்துறையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

10. கடலூரில் நவீன நரம்பியல் மருத்துவமனை!
கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் மத்திய அரசின் நரம்பியல் மருத்துவமனை அமைப்பதற்காக தேவையான நிலத்தை ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். இந்த மருத்துவமனை அமைந்தால் வடமேற்கு தமிழக மக்களுக்கு உயர் நிலை நரம்பியல் சிகிச்சை வசதி கிடைக்கும்.